பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 04 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகளிர் இடஒதுக்கீடு மசோதா தொடர்பாக விவாதிக்க நாடாளுமன்றக் கூட்டம் மூன்று வாரத்திற்குள் நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

2. ஆந்திரப்பிரதேச மறுசீரமைப்பு குறித்த மசோதா நாடாளுமன்றத்தில் இன்று நிறைவேற்றப்பட்டது.

3. மேற்குவங்கத்தில் வரும் 29-ஆம் தேதி நடைபெறவுள்ள இரண்டாவது கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

4. தீவிரவாதம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்கான இஸ்ரேலின் புதிய சட்ட மசோதாவுக்கு பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

மகளிர் இடஒதுக்கீடு மசோதா தொடர்பாக விவாதிக்க நாடாளுமன்றக் கூட்டம் மூன்று வாரத்திற்குள் நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், மத்திய அரசு பெரும்பாலான கட்சிகளுடன் இதுதொடர்பாக ஆலோசனை மேற்கொண்டதாக கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பின்னர், நாடாளுமன்றக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று அவர் கூறினார்.

இதுதொடர்பாக, அனைத்துக்கட்சி கூட்டம் நடத்த வேண்டும் என்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களவை முன்னவர் திரு ஜெ பி நட்டா பேசுகையில், மகளிர் இடஒதுக்கீடு மசோதா மூலம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை உறுதி செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆந்திரப்பிரதேச மறுசீரமைப்பு குறித்த மசோதா நாடாளுமன்றத்தில் இன்று நிறைவேற்றப்பட்டது.

மக்களவையில் ஏற்கனவே நிறைவேறிய இந்த திருத்த மசோதா, மாநிலங்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

ஆந்திரப்பிரதேசத்தின் தலைநகரமாக அமராவதி நகரத்தை மாற்றுவதற்கு இந்த மசோதா வழிவகை செய்யும்.

இதுதொடர்பான விவாதத்தில் பேசிய மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், இந்த சட்ட மசோதா வரலாற்று சிறப்பு மிக்கது என்று கூறினார்.

கடந்த 2016 ஏப்ரல் 23-ஆம் தேதி, அமராவதியை ஆந்திரப்பிரதேசத்தின் தலைநகரமாக மாற்ற, அம்மாநில அரசு அறிவிக்கை வெளியிட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் ஆந்திரப்பிரதேச மறு சீரமைப்பு மசோதா இன்று நிறைவேற்றப்பட்டதை வரவேற்பதாக குடியரசு துணைத்தலைவர்

திரு சி பி ராதாகிருஷ்ணன், ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் இளம் விஞ்ஞானி திட்டத்தின்கீழ், ஆயிரத்து 320 மாணவர்கள் பயனடைந்துள்ளதாக அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின்மூலம் பள்ளி மாணவர்களிடையே விண்வெளி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதாக கூறினார்.

இந்தியா வெளிநாடுகளை சேர்ந்த 434 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியதாக அவர் தெரிவித்தார்.

நமது விண்வெளித்துறை பொருளாதாரம் தற்போது தொள்ளாயிரம் கோடி டாலராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வரும் 2033-ஆம் ஆண்டுக்குள் இதனை 4 ஆயிரத்து 500 கோடி டாலர் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஐ நா பாதுகாப்புப்படையினரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், ஐ நா பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதலை கண்டிப்பதாக கூறினார்.

லெபனானில் உள்ள ஐ நா பாதுகாப்புப் படையில் 600 இந்திய ராணுவ வீரர்கள் பணியாற்றி வருவதாக அவர் தெரிவித்தார்.

உலக அமைதிக்காக ஐ நா-வுடன் இந்தியா ஒருங்கிணைந்து செயல்படுவதாக அவர் கூறினார்.

மேற்காசிய பிரச்சினை குறித்து பேசிய அவர், Hormuz நீரிணை பிரச்சினை தொடர்பாக, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுடன் ஆலோசனை நடத்த பிரிட்டன் அழைப்பு விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை செயலர் இந்த கூட்டத்தில் பங்கேற்கப் போவதாக அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷ், இலங்கை நாடுகளின் கோரிக்கையை ஏற்று இந்தியா பெட்ரோலியப் பொருட்களை அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் வரும் 29-ஆம் தேதி நடைபெறவுள்ள இரண்டாவது கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

142 தொகுதிகளுக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வரும் 9-ஆம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை 10-ஆம் தேதியும், மனுக்களை விலக்கிக்கொள்ள 13-ஆம் தேதி கடைசிநாளாகும்.

152 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு முதல்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த மாதம் 30-ஆம் தேதி தொடங்கியது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வரும் 6-ஆம் தேதி கடைசிநாளாகும்.

<<<<<<>>>>>>

தமிழகம், கேரளம், புதுச்சேரி, அஸ்ஸாம் மற்றும் மேற்குவங்கத்தில் தேர்தலுக்கு **48** மணிநேரத்திற்கு முன்பாக ஊடகங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளக் கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தொலைக்காட்சி மற்றும் வானொலிகளிலும் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான நிகழ்ச்சிகள் இந்த நேரத்தில் இடம்பெறக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் **9-**ஆம் தேதி காலை **7** மணி முதல், **29-**ஆம் தேதி இரவு **6.30** வரை அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியிடக்கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் வரும் **23** மற்றும் **29-**ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

பிஜேபி-யின் மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, கொல்கத்தாவில் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார்.

மேற்குவங்கத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர், ஊழல், சட்டவிரோத ஊடுருவல், பெண்களுக்கு பாதுகாப்பின்மை, உள்ளிட்ட பிரச்சினைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பின்னர் அஸ்ஸாம் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, அம்மாநிலத்திற்கு ஒரு லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவித்தார்.

அஸ்ஸாமில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, ஆட்சிக்கு வந்தால் மாநில அரசுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

அஸ்ஸாம் மாநிலத்தின் **Karbi, Jorhat** உள்ளிட்ட இடங்களில் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் **100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நாகை மாவட்டத்தில் மீனவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கடலில் படகு பேரணி மூலம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 45 Sec. )***

<<<<<<>>>>>>

தீவிரவாதம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்கான இஸ்ரேலின் புதிய சட்ட மசோதாவுக்கு பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக, சவுதி அரேபியா, எகிப்து, ஜோர்டான், இந்தோனேஷியா, பாகிஸ்தான், கத்தார், துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட் உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கண்டன அறிக்கையை வெளியிட்டனர்.

இந்த மசோதா மூலம் அப்பகுதியில் அமைதிக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தீவிரவாதம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட பாலஸ்தீனர்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்கான மசோதா இஸ்ரேல் நாடாளுமன்றம் கடந்த திங்கட்கிழமை நிறைவேற்றியது.

இதனை ஐ நா, ஐரோப்பிய யூனியன் கண்டனம் தெரிவித்த போதிலும், அமெரிக்கா, இது இஸ்ரேல் நாட்டின் விவகாரம் என்று கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

ராணுவ நடவடிக்கை மூலம் **Hormuz** நீரிணை பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்று பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராணுவ நடவடிக்கை மூலம் அப்பகுதியில் பதற்றம் ஏற்படும் என்று கூறினார்.

மேலும், ஈரான் ராணுவப்படையினர் அப்பகுதியில் உள்ள எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் அபாயம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈரானுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதன்மூலமே, **Hormuz** நீரிணை பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்று திரு இமானுவெல் மெக்ரான் கூறினார்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

--------------

மகாராஷ்ட்ராவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-0** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Amodini Naik**-ஐ வென்றார்.

இப்போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவில், மதுரிமா சாவந்த், ஜெனிஃபர் ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<<END>>>>>>>**